# வேதாகம வியாக்கியானம் (அ) பொருள் விளக்கம் காணுதல்

## வேதாகம வியாக்கியானம் காணுதலின் அவசியம்:

பரிசுத்த வேதாகமம் நமக்கு எழுதப்படவில்லை ஆனால் நமக்காக எழுதப்பட்டிருக்கிறது. உதாரணமாக: அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுக்கு எழுதின நிருபமானது அநேக ஆண்டுகளுக்கு முன்பாக தீமோத்தேயுக்கு எழுதினார் ஆனால், அதில் உள்ள பாடங்கள் இன்றைக்கு நமக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. ஆக, வேதாகமம் எழுதப்பட்ட காலத்திற்கும் நாம் வாழக்கூடிய இந்தக் காலத்திற்கும் இடையே பெரிய இடைவெளி இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். வேதாகம காலக்கட்டத்தின் பின்னணி, உடை, மொழி, உணவு முறை, கலாச்சார பழக்கவழக்கங்கள் அனைத்தும் வித்தியாசமாக இருந்தது. இப்படிப்பட்ட பின்னணியில்தான் வேதாகமம் எழுதப்பட்டது. விசேஷமாக யூத கலாச்சாரத்தின் பின்னணியில் தான் வேதாகமம் எழுதப்பட்டுள்ளது. நாம் வாழக்கூடிய இப்போதைய கலாச்சார பின்னணிகள் முற்றிலும் மாறுபட்டது. ஆக, இந்த வேதாகம இடைவெளி காலங்களை நாம் சரிசெய்தால் மட்டுமே அதாவது ஒரு பாலம் அமைத்தால் மட்டுமே இந்த வேதாகமத்தின் பாடங்களை நமக்கு பிரயோஜனப்படுத்திக்கொள்ளமுடியும். வேதாகமத்தில் ஒரு வசனத்தை வாசிக்கும்பொழுது அது எனக்கு என்று நேரடியாக எடுத்துக்கொள்வதற்கு முன்பாக அது யாருக்கு, யாரால், என்ன நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்பதை கவனிக்க வேண்டும்.

## வேதாகம வியாக்கியானம் காணுதலின் கோட்பாடுகள்

1. பொதுவாக ஒரு வசனத்திற்கு ஒரு பொருள் விளக்கமே இருக்கும். பரிசுத்த வேதாகமத்தில் ஒரு வசனத்தை குறிப்பாக எடுத்து இன்றைக்கு பல வியாக்கியானங்களை கொடுக்கலாம். ஆனால், அதை எழுதின எழுத்தாளருடைய மனதில் ஒரே ஒரு அர்த்தம்தான் இருந்திருக்கும்.

   வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிற ஒரு வார்த்தைக்கு அர்த்தங்கள் அதிகமாக இருக்கலாம். உதாரணமாக: ஆவி என்கின்ற வார்த்தையானது அது மனிதனுடைய ஆவியையோ அல்லது பரிசுத்த ஆவியானவரையோ அல்லது அசுத்த ஆவியையோ குறிக்கக்கூடியதாக இருக்கும். அதுபோல தண்ணீர் என்கின்ற வார்த்தை திருவசனத்தை குறிப்பதாகவும் (எபே 5:26), பரிசுத்த ஆவியானவரை குறிப்பதாகவும் (யோவான் 7:38,39), தண்ணீரை (மத் 10:42) குறிப்பதாகவும் வேதத்தில் வாசிக்கிறோம். இப்படியாக வேதத்தில் ஒரு வார்த்தைக்கு அநேக அர்த்தங்கள் இருக்கலாம் ஆனால், அந்த பகுதிக்கு ஒரே வியாக்கியானம் அல்லது விளக்கம் மட்டுமே இருக்கும். அந்த வியாக்கியானத்தை அல்லது அந்த பொருளை அந்த வசனத்தின் பின்னணியின் அடிப்படையில்தான் பொருள்கொள்ளவேண்டும்.

2. வேத வசனங்களை அதின் இயல்பான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

   பரிசுத்த வேதாகமம் மனிதன் புரிந்துகொள்ளும்படியாக சாதாரணமான நிலையில் எழுதப்பட்டிருக்கிறது ஆகவே, எழுதப்பட்ட நிலையில் நாமும் அதை இயல்பாக எடுத்துக்கொள்ளவேண்டும். சில சமயங்களில் இதற்கு வேதாகமத்தில் விதிவிலக்கு காணப்படும்; சில இடங்களில் சில விஷயங்களை உருவகங்களாகவும், கவிதை நடையிலும் பயன்படுத்தியிருப்பார்கள் இவைகளைத் தவிர மற்ற அனைத்து பகுதிகளையும் அதனுடைய இயல்பான தன்மையில் எடுத்துக்கொள்ளவேண்டியது அவசியம்; அதற்கு ஆவிக்குரிய அர்த்தங்களை கொடுக்கவேண்டியது அவசியமில்லை. உதாரணமாக: இயேசு கிறிஸ்து சொன்ன சமாரியனுடைய உவமையில் ஒரு மனிதன் மற்றொரு மனிதன்மீது எப்படி அன்பாக

இருக்கவேண்டும் என்பதை கற்றுக்கொடுத்தார். ஆனால், இன்றைக்கு நாம் வியாக்கியானம் செய்யும்பொழுது தேவன் நம் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்று சொல்லி சமாரியனை இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்பிட்டு வியாக்கியானம் செய்கிறோம். இப்படிச் செய்யும்போது எழுத்தாளர் என்ன நோக்கத்தோடு அந்த பகுதியை எழுதினாரோ அதை நாம் விட்டுவிடுகிறோம்.

3. ஒரு வேதாகம பகுதியின் உடனடி பின்னணியை கருதுவது அவசியம்:

<u>உதாரணமாக:</u> முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத் 6:33). இதில் சொல்லப்பட்டுள்ள 'இவைகளெல்லாம்' என்ற வார்த்தையின் உடனடி பின்னணியை நாம் கவனியாதுபோனால் தவறான அர்த்தத்தை நாம் கொடுக்கவேண்டியதுவரும். ஆனால் இதனுடைய உடனடி பின்னணியை நான் பார்க்கும்பொழுது நம்முடைய அத்தியாவசிய தேவையை குறிப்பிடுகிறாரேதவிர, சரீரப் பிரகாரமான எல்லா ஆசீர்வாதத்தையும் இங்கே குறிப்பிடவில்லை (வச. 25–32).

முதல் நூற்றாண்டிலே ஒரு நிருபத்தை ஒரு குறிப்பிட்ட நபருக்கோ அல்லது சபைக்கோ எழுத்தாளர் எழுதும்போது அதை அவர்கள் நிறுத்தாமல் முழுமையாக வாசித்திருப்பார்கள். அந்நாட்களில் வசன பிரிவுகளோ, அதிகார பிரிவுகளோ கிடையாது. ஆக, நாம் ஒரு வசனத்தை வாசிக்கும்பொழுது அதனுடைய முழுபகுதியையும் கவனிக்கவேண்டியது அவசியம்.

4. ஒரு வேதபகுதியை வியாக்கியானம் செய்யும்போது அதனுடைய வரலாற்றுப் பின்னணியை கருதுவது அவசியம். அதாவது வேதாகமம் எழுதப்பட்ட நாட்களின் கலாச்சாரத்தை படிப்பது அவசியம். கலாச்சார பின்னணியில்... வரலாறு, புவியியல், வர்த்தகம், இலக்கணம், இலக்கியம், மதம் மற்றும் அரசியல் சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஆகியவற்றை கற்றுக்கொள்வது அவசியம்.
   a. <u>வேதத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள்:</u> சேக்கல், வெள்ளிநாணயம் போன்ற நாணயங்களுடைய மதிப்பை அறிந்தால் அந்த வேதபகுதியை புரிந்துகொள்ளமுடியும்.
   b. <u>புவியியல் அமைப்பு:</u> ஒரு மனிதன் எருசலேமிலிருந்து எரிகோவிற்கு போகையில்; இயேசுகிறிஸ்து தெக்கபோலியில் இருந்தார்; கப்பர்நகூமிற்கு வந்தார் என்று அனேக ஊர்களின் பெயரை வாசிக்கிறோம். இந்த ஊர்களின் புவியியல் அமைப்பை புரிந்துகொள்வது அவசியம். நாயீன் என்ற ஊருக்கு போகும்பொழுது அங்கு மரித்த வாலிபனை உயிரோடுகூட எழுப்புகிறார்; பிலிப்பு செசரியா பகுதிக்கு வரும்பொழுது: 'என்னை யார் என்று ஜனங்கள் நினைக்கிறார்கள்' என்று சீஷர்களிடம் கேட்கிறார். ஏன் கிறிஸ்துவானவர் ஒலிவமலையிலிருந்து பரமேறவேண்டும்? ஒவ்வொரு இடத்திற்கும் ஒரு முக்கியத்துவம் உண்டு: ஏன் அந்த இடத்தில் இந்த காரியம் நடந்தது? ஏன் கிறிஸ்துவானவர் இந்தக் காரியங்களைச் இந்தப் பகுதிகளில் செய்கிறார் என்ற கேள்விகளுக்கு புவியியல் பதில் சொல்லும்.
   c. <u>வரலாற்று பிண்ணனி:</u> அதேபோல வேதத்தை வாசிக்கும்பொழுது அநேக இராஜாக்களுடைய பெயர்களை காணமுடியும். ஏன் இப்படிப்பட்ட காலகட்டத்தில் இந்த இராஜா அந்த நாட்டை அரசாண்டார்? ஏன் இந்த இராஜாவின் நாட்களில் இந்த நிகழ்ச்சி நடந்தது? <u>உதாரணமாக:</u> 'திபேரியுராயன்' ராஜ்யபாரம் பண்ணின பதினைந்தாம் வருஷத்திலே, 'பொந்தியுபிலாத்து' யூதேயாவுக்குத் தேசாதிபதியாயும், 'ஏரோது' காற்பங்கு தேசமாகிய கலிலேயாவுக்கு அதிபதியாயும், அவன் சகோதரனாகிய 'பிலிப்பு' காற்பங்கு தேசமாகிய இத்துரேயாவுக்கும், திராகொனித்தி நாட்டிற்கும் அதிபதியாயும், 'விசானியா'

காற்பங்கு தேசமாகிய அபிலேனேக்கு அதிபதியாயும்.... (லூக்கா 3:1,2). இந்த வசனத்தில் அநேக இராஜாக்களை குறித்து வாசிக்கிறோம்; இவர்களைக் குறித்து படிக்கும்போது நமக்கு வரலாற்று வெளிச்சம் கிடைக்கும். பழைய ஏற்பாட்டில் எகிப்து, பாபிலோன், மேதிய, பெரிசீய மற்றும் கிரேக்க சாம்ராஜ்ஜியத்தின் இராஜாக்களை குறித்தும் பார்க்கமுடியும்.

d. <u>அதேபோல இலக்கணம் என்று சொல்லும்போது:</u> நாம் வேதத்தை வாசிக்கும்போது அதில் 'ஆனால்' என்று குறிப்பிடுகிற இடத்தில் அதற்கு முந்தைய பகுதிக்கும் அதற்கு பிந்தைய பகுதிக்கும் உள்ள வேறுபாடுகளை கவனிக்கவேண்டும். இப்படியிருக்க என்ற வார்த்தை வரும்போது அதற்கு முந்தைய பகுதியை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

e. <u>மொழி வித்தியாசங்கள் இருக்கின்றது</u>: மூல பாஷையில் பயன்படுத்தப்பட்டிருக்கிற வார்த்தையை தமிழில் மொழிபெயர்க்கும்பொழுது சரியான துல்லியமான வார்த்தை கிடைக்காததால் சில வித்தியாசமான வார்த்தைகளை பயன்படுத்தியிருக்கலாம். ஆக, மூலபாஷையின் வார்த்தையை ஒப்பிட்டு படிப்பது அவசியம்.

இவைகள் எல்லாவற்றையும் கவனித்து படிக்கும்போது மட்டுமே வேதாகமம் எழுதப்பட்ட காலத்திற்கும் தற்போதைய காலத்திற்கும் இடையே உள்ள இடைவெளியை நாம் புரிந்துகொண்டு படிக்கமுடியும்.

5. வேதாகம வெளிப்பாட்டின் முன்னேற்றத்தை கண்டு உணர்ந்து கொள்வது அவசியம்

தேவன் வேதாகமத்தை ஒரே நேரத்தில் ஒரே மனுஷனிடத்தில் முழுமையாக கொடுக்கவில்லை; ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு மனுஷனிடத்திலே படிப்படியாக அவருடைய வார்த்தையை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆக ஒரு விஷயத்தை நாம் கற்றுக்கொள்ளும்போது முழு வேதாகமும் அதைக்குறித்து என்ன சொல்லுகிறது என்பதை ஆராய்ந்து பார்த்து, அந்த விஷயத்தை குறித்ததான படிப்படியான முன்னேற்றம் வேதத்தில் எப்படி இருக்கிறது என்பதை கவனிக்கவேண்டும்.

- <u>உதாரணமாக: உணவு விஷயத்தை பார்க்கும்பொழுது</u> நோவா காலம் வரைக்கும் சைவ உணவு அனுமதிக்கப்பட்டு இருந்தது; ஆனால் நோவாவின் உடன்படிக்கைக்கு பிற்பாடுதான் அசைவ உணவு சாப்பிடும் முறை வந்தது. பின்பு நியாயப்பிரமாணத்தின் காலத்தில் இவைகளை சாப்பிட வேண்டும்; இவைகளை சாப்பிட கூடாது என்கின்ற உணவுக் கட்டுப்பாட்டு முறையை தேவன் கொடுக்கிறார். ஆனால் புதிய ஏற்பாட்டில் இந்த உணவு கட்டுப்பாடுகளை கர்த்தர் நீக்கி போடுகிறார்.
- அதேபோல, பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்கும் அனேக வித்தியாசங்கள் உண்டு. இப்பொழுது ஆராதிக்கக்கூடிய நாம் பலி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.
- மற்றொரு உதாரணமாக: தாவீது சங்கீதம் 51இல் உம்முடைய பரிசுத்தஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாதேயும் என்று ஜெபிக்கிறார். ஆனால் நாம் இப்பொழுது இப்படி ஜெபிக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை காரணம்! பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம் செய்கிறார். ஆனால், நாம் பாவம் செய்யும்போது அவர் துக்கப்படுகிறார் என்று பார்க்கிறோம் (எபேசியர் 4:30)
- நியாயப்பிரமாணத்தின் காலத்தில் ஓய்வு நாளில் அதாவது சனிக்கிழமைகளில் வேலை செய்யும்போது கல்லெறிந்து கொலை செய்வார்கள் ஆனால் இப்பொழுது அப்படி நாம்

செய்வதில்லை. இவைகளின் காரணம்! பரிசுத்த வேதாகமத்தின் வெளிப்பாட்டின் முன்னேற்றமே ஆகும்.

6. வேதத்தை வேதத்தோடு ஒப்பிடுவது அவசியம்.

பரிசுத்த வேதாகமம் முழுவதிலும் ஒரு இசைவு இருக்கிறது. ஒரு பகுதியை வாசிக்கும்பொழுது கேள்வி எழும்புகிறதெனில், அதற்கான பதில் வேறு ஒரு பகுதியில் இருக்கும். இன்றைக்கு நாம் வேதாகமத்தை புரிந்துகொள்வதற்கு இருக்கக்கூடிய ஒத்தவாக்கியம், விளக்க உரை போன்ற அநேக உபகரணங்கள் அந்நாட்களில் இல்லை. அந்த சமயத்தில் வேத வல்லுநர்கள் இரவும் பகலுமாக அநேக பிரயாசப்பட்டு வேதத்தை வேதத்தோடு ஒப்பிட்டுதான் இப்படிப்பட்ட இந்த உபகரணங்களை உருவாக்கினார்கள். ஒரு பகுதியை வேதாகமத்தில் வாசித்து, மற்றொரு பகுதியில் அதை பார்க்கும் பொழுது வேறுபாடாயிருப்பது போன்று தோன்றும்.

- <u>உதாரணமாக:</u> விசுவாசத்தினால் இரட்சிப்பு என்று ரோமர் மற்றும் அநேக புத்தகங்களில் வாசிக்கிறோம் ஆனால் யாக்கோபு செல்லும்பொழுது கிரியைகளினால் அல்லவா இரட்சிக்கப்பட்டான் என்று கூறுகிறார் (2:21). விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு என்பதையும், இரட்சிக்கப்பட்ட விசுவாசி தன்னுடைய விசுவாசத்தை கிரியைகளில் காண்பிப்பான் என்பதையும் நாம் வசனத்தோடுகூட ஒப்பிட்டு பார்க்கும்போது மட்டுமே புரிந்துகொள்ளமுடியும். சுவிசேஷ புத்தகங்களில் இப்படி அநேக வேறுபாட்டை நாம் காணமுடியும். ஆனால் ஒவ்வொரு எழுத்தாளர்களும் அவர்களுடைய கோணத்தின் அடிப்படையிலும், நோக்கத்திலும் எழுதியிருக்கிறார்கள். இதை நாம் வேதத்தை வேதத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து சரிசெய்து கொள்ளமுடியும்.
- ஆதியாகமத்தில் 'சர்ப்பம்' என்று வாசிக்கிறோம் (ஆதி 3:1). ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தில் 'பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம்' (வெளி 12:9) என்று வாசிக்கிறோம். ஆக, ஆதியாகமத்தில் 'சர்ப்பம்' என்று சொல்லப்பட்டதை வெளிப்படுத்தல் புத்தகத்தில் படிக்கும்போதுதான் அது 'பிசாசு' என்று புரிந்துகொள்கிறோம்.
- அப்பொழுது, இரண்டுபேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான். இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக்கொண்டிருப்பார்கள்; ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள் (மத் 24:40,41). இதனுடைய ஒத்த பகுதியை லூக்கா 17:34–36 இல் பார்க்கமுடியும். சீஷர்கள் இயேசு கிறிஸ்துவிடம் 'எங்கே' என்று கேள்வியை எழுப்புகிறார்கள். இந்த 'எங்கே' என்று சொல்லும்பொழுது 'எடுத்துக்கொள்ளப்படுகிறவர்கள்' எங்கே எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள்? என்ற அர்த்தத்திலேதான் அவர்கள் கேட்டிருக்கவேண்டும். அதற்கு கிறிஸ்துவின் பதில் பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் கூடும் என்கிறார் (லூக்கா 17:37). ஆக, இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை (பகிரங்க வருகையை) குறிப்பதாக இருக்கிறது; கைவிடப்படுகிறவர்கள் ஆயிரம் வருட அரசாட்சிக்கு செல்வார்கள். எடுத்துக்கொள்ளப்படுகிறவர்கள் நரகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள் என்பதை அதனுடைய பின்னணியில் இருந்து அறிந்து கொள்ளலாம்.